©
தமிழ்நாடு அரசு
2026

[ பதிவு எண்.டி.என்./டி.டி.எல்.10

# திண்டுக்கல் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

திண்டுக்கல், பிப்ரவரி 23, 2026
மாசி 11, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057

[எண். 10

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4–ன் கீழ் திண்டுக்கல் மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவிக்கை

(ந.க.எண்: அ2/5325 /2025, நாள்: 20.02.2026)

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், விராலிபட்டி கிராம ஊராட்சியைச் சேர்ந்த மீனாட்சிபுரம் குக்கிராமம் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிறுமலை கிராம ஊராட்சிக்கு அருகில் உள்ளதால் விராலிப்பட்டி கிராமத்தை விட சிறுமலை கிராம ஊராட்சிக்கு செல்ல எளிதாக உள்ள காரணத்தினால் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், விராலிபட்டி கிராம ஊராட்சியைச் சேர்ந்த மீனாட்சிபுரம் குக்கிராமத்தை திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுமலை கிராம ஊராட்சியுடன் இணைத்து கீழ்கண்ட விபரப்படி மறுசீரமைப்பு செய்து அரசாணை (நிலை) எண் 372, ஊரக ஊராட்சி மற்றும் ஊராட்சித் (பரா–2(1)) துறை, நாள் 31.12.2025 – ன்படி அரசாணை வெளியிடப்பட்டு, திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் எண்.32, நாள்: 31.12.2025–ல் சிறப்பு வெளியீடாக பிரசுரம் செய்யப்பட்டது.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | குக்கிராமங்கள் பிரிக்கப்படுவதற்கு முன் உள்ள கிராம ஊராட்சியின் பெயர் | கலம் 3–ல் உள்ள கிராம ஊராட்சியிலிருந்து பிரிக்கப்படும் குக்கிராமத்தின் பெயர் | கலம் 4–ல் உள்ள குக்கிராமம் இணைக்கப்பட உள்ள கிராம ஊராட்சியின் பெயர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 01 | வாடிப்பட்டி (மதுரை) | விராலிபட்டி | மீனாட்சிபுரம் | சிறுமலை (திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம்) |
| மொத்தம் | | 01 | 01 | 01 |

மேற்காணும் திண்டுக்கல் மாவட்ட அரசிதழ்சிறப்பு வெளியீட்டின் பேரில் 21.01.2026 அன்று திண்டுக்கல் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற கருத்து கேட்புக் கூட்டத்தில் ஆட்சேபணை மனுக்கள் ஏதும் பெறப்படாத சூழ்நிலையில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில், மாற்றம் செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமத்தினை அந்தந்த கிராம ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யும் போது, கிராம ஊராட்சிகளில் ஏற்படும் திருத்தங்களுடன், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 13207233/ப.ரா.2(1)/2026-1, நாள். 20.02.2026-ல் வழங்கப்பட்ட அனுமதியின்படி, கீழ்காணும் விவரப்படி இறுதி அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

## அட்டவணை – I

## மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் விராலிபட்டி கிராம ஊராட்சியிலுள்ள மீனாட்சிபுரம் குக்கிராமத்தை திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், சிறுமலை கிராம ஊராட்சியுடன் இணைத்தல்.

| வ. எண் | மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தின் பெயர் | குக் கிராமங் கள் பிரிக்கப் படுவதற்கு முன் உள்ள கிராம ஊராட்சி யின் பெயர் | குக் கிராமங் களின் பெயர் | பிரிக்கப் படும் குக்கிராம த்தின் பெயர் | இணைக்கப் பட்டுள்ள கிராம ஊராட்சியின் பெயர் (மாவட்டம், ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்) | சிறுமலை கிராம ஊராட்சி யுடன் இணைக்கப் பட்டபின் குக் கிராமங்களின் பெயர் | இறுதி ஆணை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மதுரை (வாடிப் பட்டி) | விராலி பட்டி | 1. மீனாட்சி புரம்<br>2. விராலி பட்டி | மீனாட்சி புரம் | சிறுமலை (திண்டுக்கல் மாவட்டம்) திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் | 1. அகஸ்தியர் புரம்<br>2. அண்ணா நகர்<br>3. கடமான் குளம்<br>4. தாழக்கடை<br>5. தவிட்டுக் கடை<br>6. தென்மலை<br>7. வேளாண் பண்ணை<br>8. சிறுமலை புதூர்<br>9. சிறுமலை பழையூர்<br>10. மீனாட்சி புரம் | சிறுமலை கிராம ஊராட்சியுடன் மீனாட்சிபுரம் குக்கிராமம் இணைப்பதற்கு முன் மொத்தம் 9 குக்கிராமங்கள். இணைப் பிற்குபின் மொத்தம் 10 குக் கிராமங்கள் உள்ளன. |

மேலும், இந்த இறுதிஅறிவிக்கை மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் வரும் நடைமுறைக்கும் பொருந்தும்.

மேலே கூறப்பட்ட ஆணையின்படி வெளியிடப்பட்ட இந்த இறுதி அறிவிக்கையானது திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

திண்டுக்கல்,
நாள்: 20.02.2026

ஒப்பம் ....................................,
மாவட்ட ஆட்சித்தலைவர் /
ஊராட்சிகளின் ஆய்வாளர்,
திண்டுக்கல் மாவட்டம்.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு
மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.